# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 3 ஆம் ஞாயிறு | 25 ஜனவரி 2026

இறைவார்த்தை ஞாயிறு

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்

மாதாந்திர நோக்கம்: குடும்பம்: நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புதல்



# கடவுளின் அரசு நம்மிடையே உள்ளது

இஸ்ரயேலைக் குறித்த இறைவாக்கு “ காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்” என்ற எசாயாவின் வார்த்தைகளை மத்தேயு இயேசுவின் பணி வாழ்வை, பண்டைய இறைவாக்கின் நம்பிக்கையில் நிலைநிறுத்துகிறார். செபுலோன் நாடு, மற்றும் நெப்தலி(கலிலேயா) இருளில் வாழ்ந்து மரணத்தால் மறைக்கப்பட்ட நாடுகள்.

கலிலேயாவில் இயேசுவின் பொது ஊழியம் பண்டைய கால நம்பிக்கையை நிறைவேற்றியது மட்டுமல்லாமல், கடவுளின் அரசையும் கொண்டுவருகிறது. “மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது” என்று ஆண்டவர் போதிக்கிறார். அதன்பிறகு அவர் முதல் திருத்தூதர்களை அழைக்கிறார். அவர்களின் வாழ்க்கையில் தொடர்ச்சியான தீவிர மாற்றங்கள் மூலம் மீன் பிடிக்கும் இம்மனிதர்களை, மனிதர்களைப் பிடிப்பவர்களாக மாற்றி, அவர்கள் மத்தியில் கடவுளின் அரசை உருவாக்குவதன் மூலம் விவிலிய வரலாற்றில் தடம் பதிக்கிறார்கள்.

இன்றைய யதார்த்த உலகில் குடும்பங்கள் எவ்வாறு கடவுளின் அரசை அனுபவிக்கின்றன. அரசன் எங்கேயோ அங்கு தான் அரசு இருக்கும், ஒரு குடும்பம், நிதி சுமைகள், சுகாதார நெருக்கடி அல்லது குடும்ப வாழ்க்கையின் தேவைகளை தொடர்ந்து நிறைவேற்ற இடைவிடாத அழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்படும்போது, கிறிஸ்துவின் ஒளி மங்கியது போலத் தோன்றலாம். அல்லது அது தொலைவில் இருப்பதுபோல் உணரலாம். ஆனாலும், கடவுளின் அரசு துல்லியமாக இந்த யதார்த்த வாழ்க்கைக்குள் நுழைகிறது.

கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரு குடும்பம், இறைவேண்டல்களில் கடவுளுக்கு முன்பாக பாதிக்கப்படக்கூடியவர்களாகவும், உண்மையானவர்களாகவும் இருப்பதன்மூலம் ஒளியை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றனர். “எங்களுடைய அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்” என்பது தெய்வீகபிரசன்னத்தின் முன் நாம் வைக்கும் ஒரு இதயப்பூர்வமான வேண்டுகோள். துணிவுடன் ஆண்டவருக்காகக் காத்திருக்கவும், உறுதியான இதயமுள்ளவர்களாகவும் இருக்க திருப்பாடல் ஆசிரியர் நம்மைத் தூண்டுகிறார். ஏனென்றால், நம்முடைய பலவீனத்தில் தூய ஆவியார் அவருடைய அரசை வழங்குவதற்கு நாம் இடமளிக்கிறோம். நம்மிடம் மிகுதியாக இருக்கும்போது, அதை மழைக்காலத்திற்காக சேமித்து வைக்க நம்முடைய மனித இயல்பு நமக்குக் கற்றுத்தருகிறது. ஆனால் கடவுளின் அரசு அவருடைய அருளையும் அவருடைய தெய்வீகத்தையும் நம்பி தரச்சொல்கிறது. ஒருவர் மிகவும் கடினநிலையில் இருக்கும்போது வலியோடு கொடுப்பதுதான் நம்பிக்கையின் ஆற்றல்மிக்க அறிவிப்பைக் காட்டுகிறது. ஒரு குடும்பத்தின் பாதுகாப்பு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் இல்லை ஆனால் அரசருக்காக பணியில் இருப்பதுதான் நம்பிக்கையின் அறிக்கை.

நம்முடைய அதிசக்களில் அனுபவங்களை செல்வமாகக் கொண்ட வயதுமுதிர்ந்த உறுப்பினர்கள் நம்மிடையே உள்ளனர். பணத்தால் வாங்கமுடியாத உறவுகளின் கதைகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள். பொருள் தேவைகளைப் பகிர்வது நம்பமுடியாத சமூக உணர்வை வளர்க்கிறது. திருத்தூதர் பணி 2:42 இல் தொடக்க கால கிறிஸ்துவ சமூகம் இதைப் பின்பற்றியது. ‘எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.. அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர்.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த முயற்சி இறுதியில் பலனளிக்கும். நம் மத்தியில் கடவுளின் அரசு பிரசன்னமாக இருக்க நாம் பாடுபடவேண்டும். உங்களிடையே பிளவுகள் வேண்டாம், ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள் என்று கொரிந்துவில் உள்ள நம்பிக்கையாளர்களை, புனித பவுல் வலியுறுத்துகிறார்.

ஆண்டவரே, உமது அரசு வருக. உமது திருவுளம் நிறைவேறுக.

Celebrate Listen Walk (cf. Is 2:2-5)

MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 8: 23-9:3

திருப்பாடல் 27: 1, 4, 13-14

1 கொரிந்தியர் 1: 10-13,17

மத்தேயு 4: 12-23 (அ) 4: 12-17

குடும்பங்களில் நாம் முதலில் எவ்வாறு பகுத்தறிவது, ஒன்றாக முடிவெடுப்பது, மற்றும் ஏற்றுக்கொள்வது, உயிரையும் கொடுக்கும் அளவுக்கு அதிகாரத்தைச் செயல்படுத்துவது, மற்றும் இணைப் பொறுப்பாளர்களாகவும், இருப்பது எப்படி என்று கற்றுக்கொள்கிறோம்.

(இறுதி ஆவணம் எண்:35)

INTERNAL CIRCULATION ONLY
BUL 04/2026

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org